

# “ஆயுதம் தாங்கிய போர் அல்ல, அறிவைத் தாங்கிய போர்!”

**கழக இளைஞர் அணி நடத்திய, ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற முற்போக்கு புத்தகக் காட்சி நிகழ்வில் ‘எல்லா பேதங்களையும் எதிர்க்கப் பழகுவோம்’ என்ற தலைப்பில், கவிஞர் சுகிர்தராணி அவர்கள் ஆற்றிய உரை:**

“அனைவருக்கும் வணக்கம். திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கி 75 ஆண்டுகள் நிறைவுற்று, அதைக் கொண்டாடும் விதமாக, தி.மு.க இளைஞர் அணி முற்போக்கு புத்தகக் காட்சி, அறிவுத் திருவிழா என்ற இந்த நிகழ்ச்சியை கடந்த ஒரு வார காலமாக மிகவும் சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிறது.

## அறிவு பெற வாருங்கள்!

இந்த அறிவுத் திருவிழாவையும் எதிர்த்து விமர்சிக்க, சிலர் இருக்கிறார்கள். நான் அவர்களுக்குப் பகிரங்கமாகவே சொல்கின்றேன். உங்களுக்கு அறிவுமுதிர்ச்சி வேண்டும் என்றால், அறிவுத்திறன் வேண்டும் என்றால், இந்த முற்போக்கு புத்தகக் காட்சிக்கு வாருங்கள். இங்கே இருக்கக்கூடிய புத்தகங்களை வாங்கிப் படியுங்கள். உங்களுக்கு சமூகம் என்றால் என்ன, அரசியல் என்றால் என்ன, சமூகத்தில் இருக்கக்கூடிய மக்கள் எவ்வாறு இங்கே பார்க்கப்படுகிறார்கள் அல்லது இலக்கியத்திலே எவ்வாறு பார்க்கப்படுகிறார்கள் அல்லது அரசியல் தளத்திலே எவ்வாறு நாம் செயல்பட வேண்டும் என்று பல்வேறு சிந்தனைகளை, கோட்பாடுகளை உங்களுக்கு அளிக்கக்கூடிய ஓர் இடமாக இந்த வள்ளுவர் கோட்ட முற்போக்கு புத்தகக் காட்சி அமையும் என்று சொல்லி, அரசியல்மயப்படுத்தாத அவர்களையும் நான் வருக வருக என்று வரவேற்கின்றேன்.

## அறிவுப் போர்

நாடு இப்போது ஓர் அவசர நிலையில் இருக்கிறது. நாம் ஒருமித்த சிந்தனை உடையவர்களாக, ஒருமித்த கோட்பாடு உடையவர்களாக, ஒருமித்த கொள்கை உடையவர்களாகக் கைகோர்க்க வேண்டிய நேரம் வந்திருக்கிறது. இல்லையென்றால், தென்னிந்தியாவில் இருக்கக்கூடிய பகுத்தறிவுமிக்க நம் மாநிலங்களை எல்லாம் ஆக்டோபஸ் கரங்களைப் போல கைப்பற்றி, நம்மை ஆள்வதற்கும் அழிப்பதற்கும் ஒரு கூட்டம் காத்துக் கொண்டிருக்கிறது.

இவற்றிற்கு எதிராக நாம் ஒரு போரை நிகழ்த்த வேண்டிய ஒரு காலகட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். போர் என்று சொன்னால், அது ஓர் ஆயுதம் தாங்கிய போர் அன்று. மாறாக, அறிவைத் தாங்கிய ஒரு போர். பகுத்தறிவை, திராவிட இயக்கச் சிந்தனைகளை, அம்பேத்கரின் சிந்தனைகளை, மார்க்சிய சிந்தனைகளை உள்வாங்கி, அவற்றை ஆயுதமாகக் கொண்டு அந்தப் போரில் நாம் சமராட வேண்டும். அதற்காகத்தான் இத்தகைய விழாக்கள் இங்கே நடத்தப்படுகின்றன.

## பேதங்களுக்கு எதிராக...

சாதிய பேதம் இருக்கிறது, வர்க்க பேதம் இருக்கிறது, மத பேதம் இருக்கிறது, பாலின பேதம் இருக்கிறது. இப்படி எத்தனையோ பேதங்கள் இந்தியாவில் தலைதூக்கி நிற்கின்றன. ஓர் ஆரோக்கியமான சமூகம் தேவை என்று சொன்னால் அல்லது ஆரோக்கியமான ஒரு சமூகத்தில் நாம் வாழ வேண்டும் அல்லது நம்முடைய குழந்தைகள் வாழ வேண்டும் என்று சொன்னால், அந்தச் சமூகம் ஒரு பண்பட்ட சமூகமாக இருக்க வேண்டும். அப்படி ஆரோக்கியமான பண்பட்ட சமூகம் உருவாவதற்கும், அது செயல்படுவதற்கும் மிகப் பெரிய தடைக்கற்களாக இருப்பவைதான் இந்த பேதங்கள்.

சாதி பேதம் என்பது தலையாய ஒரு பிரச்சினை யாக இருக்கின்றது. சாதியை ஒழிக்க வேண்டிய ஒரு சமர்தான் நீண்ட நெடுங்காலமாக அயோத்திதாசப் பண்டிதரில் இருந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. சாதி என்பது ஒரு சமூக நோய். அதை நாம் எல்லோரும் சமூக நோயாகப் பார்க்காமல் ஓர் அரசியல் பிரச்சினையாக மட்டுமே கருதி, சுருக்கி விடுகின்றோம்.

நாம் அவற்றைப் பற்றிய உரையாடலை நிகழ்த்துகின்றபோது, அது ஒரு சமூகப் பிரச்சினையாக மாறாமல், வெறும் அரசியல் பிரச்சினையாகவே நின்று விடுகிறது. அண்ணல் அம்பேத்கர் அவர்கள், தந்தை பெரியார் அவர்கள் மட்டும்தான் சாதியை ஒரு சமூகப் பிரச்சினையாக, ஒரு சமூக நோயாகப் பார்த்தார்கள். இதைச் சமூக நோயாகப் பார்க்கும் போதுதான், சாதிக்கு எதிரான போராட்டத்தில் தலித்துகளும், முற்போக்கு அமைப்புகளும் மட்டும் போராடாமல், எல்லோரும் எல்லா சாதியைச் சார்ந்தவர்களும் போராடக்கூடிய ஒரு சூழல் உருவாகும்.

## மனமாற்றம் தேவை

‘வருங்காலத்தில் சாதி என்பது ஓர் உலகளாவிய பிரச்சினையாக மாறிவிடும்’ என்று அண்ணல் அம்பேத்கர் கூறினார். இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குப் போகிறவர்கள் தங்கள் உடைமைகளோடு சாதியையும் தூக்கிச் செல்கிறார்கள். அப்படி சாதி உலகளாவிய அளவில் சென்று சேருகின்ற பொழுது, நாம் யாருக்கு எதிராக அல்லது எவற்றுக்கு எதிராகப் போரிடுவது அல்லது கருத்துகளைக் கொண்டு சேர்ப்பது என்று பார்க்கின்ற பொழுது, சாதி என்பது அவரவர் மனங்களில்தான் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அண்ணல் அம்பேத்கர் அவர்கள் மிக அழகாகச் சொல்லியிருப்பார், ‘சாதி என்பது கண்ணுக்குத் தெரியக்கூடிய ஒரு சுவர் இல்லை. அப்படிச் சுவராகத் தெரிந்தால், நாம் அதை உடைத்து நொறுக்கிவிடலாம். ஆனால், அது கண்ணுக்குத் தெரியாத ஒரு சங்கிலியாக இருக்கிறது’ என்று.



**கவிஞர் சுகிர்தராணி**

அப்போது எங்கே போரைத் நாம் தொடங்க வேண்டும் என்று சொன்னால், அவரவர் மனங்களுக்குள்ளேயே போர் தொடங்க வேண்டும். மனமாற்றம் என்பதுதான் மிகச் சிறந்த ஒன்றாக இருக்கிறது. இந்த மனமாற்றம் எப்படி நமக்குள் ஏற்படும் என்றால், புத்தகங்கள் வாயிலாக. நமக்கு முன்னால் தோன்றியிருக்கக்கூடிய தலைவர்கள் தங்களுடைய சிந்தனைகளை, தங்களுடைய கொள்கைகளைப் பற்றிப் பேசியிருக்கக்கூடிய புத்தகங்களை வாசிப்பதன் வாயிலாக இந்தச் சாதிக்கு எதிராக, நாம் நமக்குள்ளேயே ஒரு போரைத் தோற்றுவிக்க முடியும்.

## பெண்ணுரிமை

இரண்டாவதாக, பாலின பேதம் என்பது, இந்தியச் சமூகத்தில் மிக அதிகமாக வேரோடி இருக்கக்கூடிய இன்னொரு சமூக நோய்.

சுயமரியாதை இயக்கம் தோன்றியபோது, மூவலூர் ராமாமிர்தம் அம்மையார், டாக்டர் முத்துலட்சுமி, அன்னை மீனாம்பாள், தர்மாம்பாள் எனப் பல்வேறு பெண்கள் தங்களை இணைத்துக் கொண்டார்கள். ஆனாலும்கூட, சமூகத்தில் பெண்களின் நிலை இப்போது எப்படி இருக்கிறது என்று சொன்னால், சமத்துவம் இல்லை என்றுதான் கூற வேண்டும். ஆண்-பெண் சமத்துவம் எங்கு மலர்கிறதோ அந்தச் சமூகம்தான் ஒரு முற்போக்கான சமூகமாக இருக்கும்.

அந்த நம்பிக்கையைத் தரக்கூடிய ஒரு படம்தான் இங்கே ‘முற்போக்கு புத்தகக்காட்சி’யின் இலச்சினையாக இருக்கிறது. இதில் தந்தை பெரியாரோடு, அண்ணல் அம்பேத்கர் அவர்களோடு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் அவர்கள் இருக்கிறார்கள், அன்னை மீனாம்பாள் சிவராஜ் அவர்கள் இருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு பெண்களை, அரசியல் தளத்தில் வைத்து அழகு பார்த்த இயக்கம் சமத்துவத்தை வழங்கியிருக்கிறது.

2023-இல் டெல்லி பல்கலைக்கழகத்தில் என்னுடைய ஒரு கவிதை, பாடமாக வைக்கப்பட்டிருந்தது. ‘கைமாறு’ என்று சொல்லக்கூடிய அக்கவிதை மலம் அள்ளும் தொழிலாளர்களைப் பற்றியது. அந்தக் கவிதை, எழுத்தாளர் பாமாவின் ‘சங்கதி’ நாவலிலிருந்து சில பகுதிகள், வங்காளத்தின் மிகப் பெரிய எழுத்தாளராக இருக்கக்கூடிய மகாஸ்வேதா தேவியின் ‘திரௌபதி’ சிறுகதை ஆகிய மூன்றும் டெல்லி பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டத்தில் இருந்தன. அவற்றை எங்களிடம் எந்தத் தகவலும் சொல்லாமல் பாடத்திட்டத்திலிருந்து நீக்கிவிட்டார்கள். காரணம், அவை பா.ஜ.க.வின் மதவாதத்துக்கும் சாதியத்துக்கும் எதிராக இருக்கின்றன என்பதால்தான்.

## கண்டன அறிக்கை

அப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு கண்டன அறிக்கையை வெளியிட்டார். உலக வரலாற்றில் இதுவரை எங்குமே இது நடந்திருக்காது. தம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்காக சென்னையிலிருந்து டெல்லி பல்கலைக்கழகத்திற்கு ஒரு கண்டன அறிக்கையை, அவர் வெளியிட்டார். ‘எங்களுடைய மாநிலத்தைச் சேர்ந்த தமிழ் எழுத்தாளர்களுடைய கவிதைகளைப் பாடப் பகுதியிலிருந்து நீக்கியதற்காக நான் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவற்றை மீண்டும் நீங்கள் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும்’ என்று அவர் அறிக்கை வெளியிட்டது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு. அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

என்னை யாரென்று அவருக்குத் தெரியாது. ஆனால், ஓர் இலக்கியத்தைக் கொண்டு சேர்க்கின்ற பணியில் இருக்கின்ற ஓர் எழுத்தாளரின் கவிதை நீக்கப்படும்போது, அவர் வெளியிட்ட கண்டன அறிக்கையை, மிக முக்கியமான ஒன்றாக நான் பார்க்கிறேன். அதில் அவர் குறிப்பிட்ட ஒரு வார்த்தை ‘தமிழ் எழுத்தாளர்கள்’ என்பது. நானும் பாமாவும் பட்டியலினத்தைச் சார்ந்தவர்கள். எங்களை ‘தலித் எழுத்தாளர்கள்’ என்றோ ‘பட்டியலின எழுத்தாளர்கள்’ என்றோ குறிப்பிடாமல், ‘தமிழ் எழுத்தாளர்கள்’ என்று அவர் குறிப்பிட்டது உண்மையிலேயே ஒரு புரட்சிகரமான செயலாக நான் பார்க்கிறேன்.

இந்த நேரத்தில் தந்தை பெரியாருக்குப் பட்டமளித்த அன்னை மீனாம்பாள் அவர்களுக்குச் சிலை அமைக்க வேண்டும் என்று தமிழக முதல்வருக்கு நான் கோரிக்கை வைக்கிறேன்.

குயிலி, டாக்டர் முத்துலட்சுமி, மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் போன்றவர்களுக்குச் சிலைகள் உள்ளன. திராவிட இயக்கத்தில் பயணித்த சுயமரியாதை இயக்கப் பெண்களுக்குச் சிலைகளை அமைப்பதன் மூலம், முதல்வர் அவர்களுக்குப் பெரும் கௌரவத்தை அளிக்கிறார். அதேபோல அன்னை மீனாம்பாள் சிவராஜ் அவர்களுக்கும் சிலை அமைக்க வேண்டும் என்று உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.” ●



* ‘நிகர் கலைக்கூட’த்தின் கலைநிகழ்ச்சி

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

எழுத்தாளர் சுகிர்தராணி பேசுவதற்கு முன்பு, ‘நிகர் கலைக்கூட’த்தின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், கார்ல் மார்க்ஸ் ஆகியோரின் சிந்தனை முழக்கங்களை முன்வைத்தபடியே அவர்கள் பறையடித்தது, பார்வையாளர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது. மேலும் வெவ்வேறு வயதினர், கல்லூரி மாணவர்கள், வெவ்வேறு பணி செய்பவர்கள் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, தமிழர்களின் பாரம்பரிய இசையும் முற்போக்குச் சிந்தனைகளுமே எங்களை இணைத்தன என்று உறுதிபட தெரிவித்தார்கள்.